போட்டி ஒழிக

ராஜாஜி

தமிழ்ப்பண்ணை

போட்டி ஒழிக

ராஜாஜி

தமிழ்ப்பண்ணை

தியாகராயநகர் — சென்னை

— முதற் பதிப்பு —
1946 பிப்ரவரி
இரண்டாம் பதிப்பு
1946 அக்டோபர்

— விலை —
அணா 12

கபீர் அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை
தமிழ்ப்பண்ணை வெளியீடு P. I. C. No. Ms. 384

ஆசிரியர் முன்னுரை

வருங்காலத்தில் மக்கள் சுகமாக வாழவேண்டு மானல் லாபமும் போட்டியும் போய் சமுதாயிகத் திட்டம் ஏற்படவேண்டும். சமுதாயிகத் திட்டம் சரியாக நிறைவேற வேண்டுமானல் போட்டி முறையில் ஏற்பட்ட பண்பாடு உதவாது. சமுதாயிக வாழ்க்கைக்குத் தகுந்த பண்பாடு தோன்ற வேண்டும். ஒரு திட்டம் சரியாக நிறைவேறுவதற்கு அரசாங்க சாசனத்தையே நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. மோசமும் திருட்டும் இல்லாமல் சாசனம் திருப்திகரமாக நடைபெற வேண்டுமானல் ஜனங் களிடையில் பரவி நிற்கும் சமயமும் பண்பாடும் அந்தத் திட்டத்துக்குச் சகாயமாக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட மனிதர்களின் சுகமும் போட்டி யும் லாபமும் சாதனமாகக் கொண்ட வாழ்க்கை-முறை போய், சமுதாய உடைமையும் போட்டி யற்ற பொது நிர்வாகமும் ஸ்தாபிதமாகி நிறை வேற வேண்டுமானல், மக்கள் உள்ளத்தில் சுயநல உணர்ச்சி ஒழிந்து தரும உணர்ச்சி வேலை செய்ய வேண்டும். பற்றின்றி கடமைகளைச் செய் யும் கரும யோகமும் வேதாந்தமுமே சமுதாயி கத் திட்டத்துக்குத் தகுந்த பண்பாடும் சமயக் கொள்கையும் ஆகும்.


போட்டி வாழ்க்கை ஒழிந்து சமுதாயிகத் திட்டம் வேண்டுவோர் அனைவரும் கருமயோகப்

பிரசாரத்தை ஒரு நிர்மாணத் திட்டமாகவே வைத்துக்கொண்டு வேதாந்தத்திலும் பகவத்கீதையிலும் புது ஊக்கம் செலுத்தவேண்டும். இது என் அபிப்பிராயம். இதை விளக்கும் நோக்கத்துடன் இந்தச் சிறு நூல் எழுதப்பட்டது.

சுத்தமாகத் தெரியாமலிருக்கும் விஷயத்தைப் பற்றியுள்ள அறிவுக்குறை ஒருவனை அவ்வளவு பாதிக்காது. ஏதேனும் ஒரு சமயத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளமுடியும். அரைகுறையாகத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கிற விஷயத்தைப் பற்றிய கஷ்டம் அதிகம். சரியாக ஆராய்ந்து தெரிந்து கொள்ளவும் மாட்டோம்; தெரியவில்லை என்பதை ஒப்புக் கொள்ளவும் மாட்டோம். வேதாந்தம் என்பது இத்தகைய விஷயம். ஆகையால் இந்த நூலின் நோக்கத்தை உத்தேசித்து வேதாந்தத்தின் கருத்துக்களை சற்று விரிவாகவே என்னால் இயன்ற வரையில் விளக்கியிருக்கிறேன்.

சமுதாயிகத்தைப் பற்றியும், வேதாந்த தத்துவங்களைப் பற்றியும், இரண்டுக்கும் உள்ள பரஸ்பர பொருத்தத்தையும் விளக்கி, சொல்ல வேண்டியதையெல்லாம் எழுதினால், கூறியது கூறாமலேயே நீண்ட நூலாக வளரும். சுருக்கமாகச் சொல்லி படிப்பவர்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டு நிறுத்திக் கொள்ளலாம் என்று எண்ணி சிறு நூலாகவே முடித்தேன்.

10—2—46 சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி



போட்டி ஒழிக

ராஜாஜி

1

போட்டித் திட்டங்களையும் சுயநல முறைகளையுமே வைத்துக்கொண்டு தற்போது வாழ்க்கை நடத்தி வருகிறோம். சமூகத்துக்கு வேண்டிய காரியங்கள் தனி மனிதர்களுடைய லாபத்திற்கென்று வியாபாரமாகவும் தொழில்களாகவும் வகுக்கப்பட்டு மக்களுடைய வாழ்க்கையானது ஒரு பெரும் போட்டிப் பூசலாக நடந்து வருகிறது. இவ்வாறு நாமே செய்துகொண்டு, வேதாந்தமும் தரும சாஸ்திரமும் உலகத்துக்கு உதவாது, ஏட்டுக்குத்தான் சரி என்று சொல்லி வருகிறோம். பிழைபட்ட வாழ்க்கை முறையில் நம்முடைய அவிவேகத்தினால் அகப்பட்டுக் கொண்டு தருமத்தையே குறைகூறுகிறோம். போட்டிக்கும் சுயநலத்திற்கும் பதிலாக பொதுப் பொறுப்பும் கடமையும் வைத்துக்கொண்டு வாழ்க்கை முறையை மாற்றி நிருமாணித்துக் கொண்டோமானால் வேதாந்தம் உண்மையாகும். பிறகு அது உலகத்துக்கெல்லாம் உதவும்.

பழைய முறையை நீக்கிப் புதுமுறையை ஸ்தாபிப்பதற்கு வேதாந்த உணர்ச்சியும் தரும வாழ்க்கையில் பற்றும் ஜனங்களிடையே பரவ வேண்டும்.

ஆனால் போட்டியும் லாபமும் சுயநலமும் அடிப் படையாகக் கொண்ட வாழ்க்கை இருக்கும் வரையில் தரும உணர்ச்சி பரவுவது கடினமா யிருக்கிறது. சமுதாய நன்மையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை நிலை பெற்றால்தான் வேதாந்த உணர்ச்சியும் தரும வாழ்க்கையும் தோன்றும்.

இது ஒரு கடினமான சிக்கல். இரண்டு தவறு கள் ஒன்றுக்கொன்று தாக்குக் கொடுத்துக்கொண்டு நிற்கின்றன. நோய் தீர்ந்தால்தான் மருந்து உடலில் ஒட்டும்; மருந்து ஒட்டினால்தான் நோய் குறையும். பைத்தியம் தீர்ந்தால்தான் கல்யாணமாகும், கல்யாணமானால்தான் பைத்தியம் போகும் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இம்மாதிரியான சிக்கல்கள் பிழைபட்ட உலகத்தில் பல உண்டு. அவற்றைக் கண்டு பயப்படாமல் முயற்சி செய் தால் சிக்கு ஓரளவு இடம் கொடுக்கும். கொஞ்சம் இடங்கொடுத்து நெகிழ்ந்தால் பிறகு வேலை சுலபமாகும்.

2

ஒரு நாட்டின் தொழில்-திறமையே அந்த நாட் டின் செல்வமாகும். மக்களின் தேகபலம், தொழிற் பயிற்சி, திறமை, படிப்பு, எண்ணிக்கை, வசிக்கும் பிரதேசம் இவற்றை யெல்லாம் சேர்த்துப் பார்த்து, நாட்டின் ஆள்பலத்தைக் கூடிய அளவு திட்டமாகவும் வகை வாரியாகவும் கணக்கெடுக்க வேண்டும். அதன் பிறகு நாட்டிலுள்ள மக்களுக்கு உணவுப் பொருள்கள் எவ்வளவு வேண்டும், எவ்

வளவு துணி வேண்டும், இன்னும் இதைப் போன்ற இன்றியமையாத மற்றப் பொருள்களெல்லாம் எந்த அளவில் உற்பத்தியாகவேண்டும், அந்த உற்பத்தி-வேலை, எந்த எந்தப் பிரதேசத்தில், எந்த அளவில் அமைந்தால் சௌகர்யம் என்கிற விஷயங்களை நன்ருக வகுத்து, இதை முற்றிலும் பொதுப் பொறுப் பாக்கிவிட வேண்டும். உணவும் துணியும், தனி மனிதர்களுடைய போட்டியிலும் சுயநலத்தி லும் அகப்பட்டு நிற்காமல் நாட்டுக்கென்று பொதுத் திட்டம் ஏற்படவேண்டும். இது முதலில் செய்து தீர்க்கவேண்டிய வேலை.

உணவு, துணி முதலிய இன்றியமையாத பொருள்களின் உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் வேண்டிய ஆள்பலம் போக, நாட்டில் அந்த அந்தப் பிரதேசத்தில் எவ்வளவு ஆள்பலம் எஞ்சி நிற்கிறது என்பதைப் பார்த்து, அதை மக்களின் நன்மைக்காக எவ்வழிகளில் பயன்படுத்தலா மென்று ஆராய்ந்து பிரதேசவாரியாகவும் பொது வாகவும் திட்டம் வகுக்கவேண்டும். இன்றியமையாத பொருள்களின் உற்பத்திக்கும், வினியோகத்திற்கும் வேண்டிய ஆள்பலம் செலவானதுபோக, மிகுதியை நாட்டு மக்களின் சுகத்திற்காகவும், சந்தோஷத் திற்காகவும் பயன்படுத்த வேண்டும். சிலருடைய அதிகப்படியான சந்தோஷத்திற்காகப் பலருக்கு அத்தியாவசியமானதை குறைக்கக் கூடாது.

வெளிநாடுகளில் உற்பத்தியாகும் பண்டங்கள் நமக்கு எவ்வளவு தேவை, அவற்றுக்குப் பதிலாக

நாம் என்ன உண்டாக்கி அனுப்பமுடியும் என்பன வற்றையெல்லாம் யோசித்து அன்னியநாட்டுப்பண்ட இறக்குமதியைப் பற்றிய திட்டமும் போடவேண்டும்.

இவற்றையெல்லாம் பொதுப் பொறுப்பாக்கி நடத்தவேண்டும். அவ்வாறு செய்யாமல் தனி மனிதர்களுடைய உரிமையாகச் செய்து தனி மனிதர்களுடைய சுயநலம், ஆசை, போட்டித்திறமை முதலிய சாதனங்களை கொண்டு நடத்திவந்த பழைய முறையானது தவறு, அவற்றில் நஷ்டமும், துக்கமுமே தவிர வேறில்லை என்று இப்போது உலகம் நன்ருகக் கண்டுகொண்டு விட்டது. யுத்த நெருக்கடியில் அனுபவசித்தமாய் விட்டது. இந்தத் தவருன முறையை இனியும் பின்பற்ருமல் பொதுப் பொறுப்பும், போட்டியற்ற திட்டமான தொழில் முறையும் கொண்ட சமுதாய வாழ்க்கை நடத்த வேண்டும். அனைவரும் தத்தம் சக்திக்குத் தகுந்தவாறு சமுதாய நன்மைக்காகத் தொழில் செய்ய வேண்டும். அனைவரும், தத்தம் அவசியத்திற்குத் தகுந்தபடி சமுதாயப் பொருளினின்று பங்கு பெற வேண்டும். தொழில் செய்யாமல் சும்மாவிருப்பது தேசத் துரோகம். தன் அவசியத்திற்குமேல் பொருள் எடுத்துக்கொள்ளப் பார்ப்பது திருட்டு. இதுவே சமுதாயிகம் அல்லது பொதுவுடைமை. சமுதாயத்தின் நன்மை, சமுதாயத்தின் பொறுப்பு—இது சமுதாயிகம். இதைத்தான் ஆங்கிலத்தில் 'சோஷலிஸம்' என்று சொல்வது. தற்போது வழங்கும் போட்டிப் பூசலுக்கு நேர்மாருனது.

3

காலத்துக்கும் தேசத்திற்கும் தக்கவாறு சமுதாயிகத் திட்டம் மாறுபடலாம். எத்தகைய சமுதாயிகத் திட்டம் பாரதநாட்டில் தற்போது அமைக்கப் படவேண்டும், எந்த முறையில் அதற்கு வேலே செய்ய வேண்டும், இவ்விஷயங்களை இப்போது தீர்த்துவிட முடியாது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். அரசியல் ஆதரவுடனும், சட்ட மூலமாகவும் இல்லாமல் பணக்காரர்களை நம்பி சமுதாய சமத்துவத்தை ஏற்படுத்தலாமென்று சிலர் கருதுவது நிறைவேறாது. அரசியல் நிர்ப்பந்தம் இல்லாமல் பணக்காரர்கள் தங்களுடைய சொத்தை தருமபரிபாலனமாகச் செய்து ஏழைகளைப் பார்த்துக் கொள்ளுவார்கள் என்று இக்காலத்தில் எதிர்பார்க்க இயலாது.

இப்பொழுது பதவியும் அதிகாரமும் வகிப்பவர்களைக் கீழே இழுத்துத் தள்ளிவிட்டு, அவற்றை ஏழைகளாகிய மற்றவர்கள் கைப்பற்றிவிடுவது பொதுவுடைமை ஆகிவிடாது. சமுதாயிகத்தை உலகம் முழுவதிலும் ஏககாலத்தில் ஏற்படுத்திவிடவும் முடியாது. ஒரு நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டாலும் பக்கத்து நாட்டில் முதலாளி ஆதிக்கமும் போட்டி வாழ்க்கையும் இருந்துவருமானல் பொதுவுடைமையும் திட்டமான வாழ்க்கையும் ஸ்தாபிதமான நாட்டிலுங்கூட மக்கள் சமுதாயிக தத்துவத்தின் பூரண பலனை அடைந்துவிட முடியாது. இதைக் கொண்டு சமுதாயிகமே பயனில்லை என்று அபிப்பிராயப் பட்டுவிடுவது அறியாமையாகும். ஒருவன் தன்

வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் அடுத்த வீட்டுக்காரன் தன் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாமல் இருக்கும் வரையில் தெருவும் காற்றும் அசுத்தப்பட்டு நோய் பரவும். அதைக்கண்டு வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதினால் பயனில்லை என்று நினைப்பது தவறாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களிடமும் அறிவு பரவும் வரையில் உழைத்துக் கொண்டே இருக்கவேண்டும். திட்டமான வாழ்க்கையும் தரும உணர்ச்சியும் இவ்வாறே நாட்டிலும் உலகத்திலும் சரியாகப் பரவும்வரையில் பொறுமையுடன் முயற்சி செய்துகொண்டே இருக்கவேண்டும்.

4

சமுதாயிகத் திட்டத்தைப்பற்றிச் சொல்லும் போது ஒரு கேள்வி பிறக்கிறது. 'தனி மனிதருக்குச் சொத்துரிமை இருப்பதால் அல்லவோ அவர்கள் வகிக்கும் தொழில்களை நன்றாக நிர்வகிக்கிறார்கள். பொதுப் பொறுப்பாக்கிவிட்டால் இதே மாதிரி நிர்வகிப்பார்களா? ஏனோதானோ என்று இருந்து விடுவார்களல்லவா?' இந்தச் சந்தேகம் கிளம்புகிறது. பொதுவுடைமை நமக்கு அனுபவம் இல்லாதபடியால் இந்தச் சந்தேகம் தோன்றுவது இயற்கை. இப்பொழுதும் பல நிர்வாகங்கள் பொதுவில் நடக்கின்றன. ஆனால் தனிமனிதர்களுக்குள்ள சொத்துரிமைக்கும், போட்டி வாழ்க்கைக்கும் நடுவே அவை நடக்கின்றன. இதனால் அவற்றில் பல ஊழல்கள் ஏற்படுகின்றன. சூழ்ந்து நிற்கும்

சுயநல வேகம் பொது நிர்வாகத்தையும் தாக்குகிறது. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பொதுப்பொறுப்புத் திட்டத்தில் இப்படித்தான் ஊழல்கள் இருக்கும் என்று எண்ணி விடக்கூடாது. சமுதாயிகத் திட்ட வாழ்க்கையில் தனிச் சொத்துரிமை என்பது மிகக் குறுகிப்போகும். பாரம்பரிய உரிமை என்பதும் முற்றிலும் மறைந்துவிடும். சேர்த்துவைக்கும் சொத்து மக்களுக்குப் போகும் என்கிற ஆசை அல்லவோ மக்கள் வாழ்க்கையில் தற்போது பிரதானமாக வேலைசெய்து வருகிறது. சமுதாயிகத் திட்டத்தில் தகப்பன் சம்பாதித்துச் சொத்து சேர்த்துவைக்காமல் போனுல் குழந்தைகள் கஷ்டப்பட வேண்டுமென்பது கிடையாது. சமுதாயிக வாழ்க்கையில் நமது நோக்கங்களும் மனோபாவங்களும் முற்றிலும் மாறுபட்டுவிடும். சொத்தை ரகசியமாய் வைத்துக்கொண்டு அனுபவிப்பது அசாத்தியம். பழைய ஞாபகத்தினுல் சில இச்சைகள் ஆரம்பத்தில் கொஞ்சம் கொஞ்சம் இருந்துகொண்டே வரும். சீர்திருத்தமடைந்த வாழ்க்கை முறையின் பயனுகக் காலக்கிரமத்தில் அவை தேய்ந்து மறைந்துபோகும். சமுதாயிக வாழ்க்கையில் பொது நன்மையே தொழிலின் நோக்கமாகிவிடும்.

5

மனிதனுக்கு இரண்டுவித ஆசை. ஒன்று, பொது ஜனங்களுக்குச் சேவை செய்யவேண்டும், பொது உபயோகத்திற்குத் தகுந்த அழகிய

பொருள்களை உண்டாக்கிப் புகழ்பெறவேண்டும் என்னும் ஆசை. மற்றொன்று, தன் சொந்த உபயோகத்திற்காகவும் சுகத்துக்காகவும் பொருள் தேடிச் சேர்க்கும் ஆசை. இரண்டும் இயற்கை வேகங்கள். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட ஆசையைப்போலவே முதலில் சொல்லப்பட்டதும் வேகங்கொண்ட ஆசையே. சொந்தத்துக்குக் கட்டும் வீடு, பொது உபயோகத்துக்குக் கட்டும் தேவாலயம் இவை இரண்டையும் பார்த்தால், கட்டுகிற சிற்பியும் வேலைக்காரர்களும் ஆலயத்தைத் தான் அதிக கவனம் செலுத்திக் கட்டுகிறார்களென்பதைக் காண்போம். இந்த உண்மையைப் பல துறைகளிலும் பார்க்கலாம். பாட்டுப் பாடுவது, நூல் எழுதுவது முதலிய கலைத்தொழில்கள் இவற்றிலெல்லாம் மக்கள் சொந்தக் காரியங்களில்விட அதிகச் சிரத்தை காட்டுவதைக் காணலாம். பொதுப் பொறுப்பாகச் செய்துவிட்டு சொந்த லாபம் இல்லாமற்போனால் கவனம் குறைந்துவிடும் என்று சொல்லமுடியாது. பொருள் திரட்டுவதில் ஆசை செலுத்துவதைப் போலவே கடமையைச் செய்து புகழ் திரட்டுவதிலும் மக்கள் ஆசை செலுத்துவார்கள்.

தபால் - போக்குவரத்து - வேலை மொத்தமாகச் சமூகம் பூராவுக்கும் பொதுவாக நடைபெறுகிறது. முன் காலத்தில் செய்திகளை அயலூருக்கு அனுப்ப, தனித்தனியாய் ஆள்பிடித்து அனுப்புவது முறையாயிருந்தது. இப்போது ஜனசமூகம் முழுவதின்

சார்பாகவும் நடைபெறும் தபால் வேலை நன்றாகவே நடைபெறுகிறது. இவ்வாறே மக்களின் ஏனைய தேவைகளையும் கூட்டுறவு முறையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

துணி உற்பத்தித் தொழிலில் பெரிய ஆலைகள் அவற்றின் பங்குதார்களுடைய சொத்துகளாக இருக்கின்றன. உண்மையில் இந்தப் பங்குதார்கள் அவற்றை நிர்வாகம் செய்வதில்லை. அதற்கென்று நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் சிலரே அவற்றை நடத்துகிறார்கள். பங்குதார்கள் தங்கள் பங்கு பாத்தியங்களை ஜப்தி செய்ய விட்டு விட்டு, கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிஸீவர்கள் நிர்வகித்தாலும் துணி உற்பத்தி குறைவின்றி நடைபெறுகின்றது. பங்கு பாத்தியங்களை ராஜாங்கத்தினிடம் ஒப்படைத்தாலும் மேற்பார்வைக்காரர்களும் தொழிலாளிகளும் உள்பட எல்லா ஆலை நிர்வாகிகளும் தங்கள் வேலையை முன்போலவே செய்துகொண்டு போவார்கள். பங்குதார்களின் ஊழியர்களாய் இருப்பதுபோய் ராஜாங்கத்துக்கு ஊழியர்களாகிவிடுவார்கள். அதனால் துணியின் உற்பத்தி சேதப்படாது.

இதைப்போலவே ஒரு ஜனசமூகத்தின் வாழ்க்கைக்கு அவசியமான சகல உற்பத்தியும், சமூகம் முழுவதிற்கும் சேவை செய்யும் காரியஸ்தர்களின் மூலம் நடைபெறலாம். போட்டி வியாபாரத்திற்குள் சிக்கியிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

தபால் இலாகா, வீதி விளக்குகள், நகர சுகா

தாரம், ரயில் வண்டி ஓட்டம், குடிதண்ணீர்-வினி யோகம், மின்சாரம் முதலிய பல நிர்வாகங்கள் பொதுவுடைமை முறையில் தற்போது நடைபெற்று வருவதே சமுதாயிகம் சாத்தியம் என்பதற்கு அத்தாட்சியாகும்.

6

ஒரு ஜனசமூகம் சுகமாகவும் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்குச் சரியான வாழ்க் கைத்திட்டம் வேண்டும். அந்தத் திட்டம் சரிவர நிறைவேறுவதற்காக மக்களுக்கு உண்மை அறிவு வேண்டும். அவர்களுடைய சமயக் கொள்கையும் பண்பாடும் அந்த வாழ்க்கைத் திட்டத்தைத் தாங்கி உதவவேண்டும்.

சமயம், பண்பாடு, கல்வி, ஆசாரம், பொருள் வினியோகம், ஆட்சிமுறை, இவையனைத்தும் ஒன் றுக்கொன்று முரண்பாடின்றி அமைந்தால் ஒரு நாடு சுகம்பெறும். முரண்பட்டு நின்றால் அந்த நாட்டு மக்கள் நிலைகெட்டு அலைவார்கள். உடலில் நரம்புகளின் வேகங்கள் ஒன்றுக்கொன்று பொருந்தி சமநிலையில் நிற்காமற்போனால் கெட்ட வியாதிகள் தோன்றுகின்றன. அதைப்போலவே தற்கால உலக வாழ்க்கையில் காணப்படும் குறை களுக்குக் காரணம் சமய-அரசியல்-பௌதிக அறிவு முரண்பாடே என்று சொல்லலாம். சமயம்,பொருள்-வினியோக-ஒழுங்கு, பௌதிக ஆராய்ச்சிப் பயன் இவை மூன்றும் முரண்படாமல் ஒன்றுக்கொன்று பலம்தந்து நிற்கவேண்டும். அப்போது மக்கள்

இன்புற்றுச் சுகவாழ்வு பெறுவார்கள். முரண் பட்டால் மக்கள் தீராத துக்கத்தில் மூழ்கிக் கஷ்டப் படுவார்கள். பௌதிக ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளையொட்டியும் அவற்றோடு முரண்படாத வகையிலுமே சமயக் கொள்கைகள் இருக்க வேண்டும். உண்மை என்பது விஷயத்துக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு மாறுபட இயலாது. கண்ணுக்குக் காணப்படும் பொருள்களைப்பற்றி ஆராய்ந்தறிந்த உண்மைகளைப் புறக்கணித்து காணாத பொருள்களைப்பற்றிய உண்மைகளை ஊகித் தல் பயன்தராது. தற்போது பௌதிக ஆராய்ச்சி களின் முடிவுகளும், அநேக சமய நூல்களில் போதிக்கப்படும் விஷயங்களும் முற்றிலும் முரண் பட்டு நிற்கின்றன. இந்த விஷயத்தில் பௌதிகம் வெற்றியடைந்து நிற்கிறது. சமயங்கள் படுதோல்வி யடைந்து நிற்கின்றன. பௌதிகப் புலவர்களின் முடிவே உண்மையென்று வைத்துக்கொண்டு எல்லா லௌகிக காரியங்களும் நடைபெறுகின்றன. ஆத்மார்த்தத்துக்கு ஒரு கொள்கையும் உலக வியா பாரத்துக்கு வேறு கொள்கையுமாக இருவிதமாகப் பிரிந்து ஒன்றோடு ஒன்று சேராமல் தனித்தனியாக நிற்கின்றன.

இதனால் ஒரு கஷ்டமும் இல்லையே என்று எண்ணலாம். பழகிப்போனால் எந்த அசம்பா விதமும் சரிப்பட்டுப் போகிறது. ஆனால் இவ்வாறு செய்துகொண்டே போனால் முரண்பாட்டின் பயனை மக்கள் அடைந்தே தீருவார்கள். பொய்யின் பயன்

துக்கம். இதைத் தப்பமுடியாது. சமயம் என்பது வெளிவேஷத்தோடு நின்றால் உள்ளத்தில் பொய்யும் மலமும் தேங்கி சமுதாய முன்னேற்றம் தடைப்படுகிறது. தனி மனிதனுடைய சுகவாழ்வும் இத்தகைய முரண்பாட்டினால் கெட்டுத்தான் போகிறது.

முற்காலத்தில் பௌதிக ஆராய்ச்சியானது ஓரளவில் நின்றது. இப்போதோ, காலப்பெருக்கின் பயனாகவும் ஆராய்ச்சிச் சாதனங்களின் பெரு வளர்ச்சியினாலும் பௌதிகப் புலவர்கள் கண்டு உலகம் பயன்படுத்திவரும் முடிவுகள் மகோன்னத அளவை அடைந்து நிற்கின்றன. இவற்றுக்கு மாறாக சமய தத்துவங்கள் நின்றால் தெய்வ வழிபாடு பொய்யாகிப்போய் பரிகாசத்துக்கும் தூற்றுக்கும் பாத்திரமாகிவிடுகிறது.

பௌதிக ஆராய்ச்சி செல்லும் வழியானது உண்மை என்கிற ராஜமார்க்கம். உண்மையை விட்டால் ஆராய்ச்சி கிடையாது. ஆகையால் எந்தக் காரணத்தைக் கொண்டும் பௌதிக சாஸ்திரம் உண்மையைவிட்டுப் பிறழாது. சமயமும் உண்மைப் பாதையிலேயே செல்லவேண்டும். தெய்வத்தைப் பற்றிய சமயக் கொள்கைகள் பௌதிக உண்மைகளுக்கு மாறாக இருக்கக்கூடாது. தெய்வ வழிபாடும் உண்மையோடு கலந்த ஒரு முயற்சியாகவே இருக்க வேண்டும். நாம் நன்றாக அறிந்த உண்மைக்கு மாறுபட்ட வற்றல் சடங்காக ஒதுக்கி வைக்கப்படக் கூடாது.

பௌதிக ஆராய்ச்சி-முடிவுகளோடு முரண்

படாத சமயத்துக்காக நாம் வேறெங்கும் தேடிப் போகவேண்டியதில்லை. அத்தகைய மதம் நம்முடைய நாட்டில் தோன்றி வெகுநாளாக நிற்கிறது. அதுவே பாரதநாட்டின் பெரும் புகழுக்குக் காரணமான வேதாந்தம். உலகத்தில் பல மதங்களும் பல ஆசாரங்களும் இருந்தாலும், பாரததேசத்து முன்னோர்கள் கண்ட வேதாந்தமும் உபதேசித்த வாழ்க்கைத் திட்டமும் அவை எல்லாவற்றிலும் சிறந்த மதாசாரம் என்பது உறுதி. உண்மை என்கிற உரைகல்லில் சோதித்தாலும் சரி, சமுதாயச் சுகம் என்கிற குறிகளைக் கொண்டு பார்த்தாலும் சரி, இந்த முடிவு ஊர்ஜிதமாகும். அந்த மதாசாரத்தை நாம் சரியாகப் பயன் படுத்தாமல் வீணாகக் குப்பையில் கிடக்க விட்டிருக்கிறோம்.

'உண்மையே வெற்றி அடையும். உண்மைக்கு மாறானது ஒரு நாளும் வெற்றி அடையாது. கடவுளை அடையும் பாதை உண்மை என்கிற நல்ல தளவரிசையால் பரப்பப்பட்டிருக்கிற ராஜபாட்டை' என்பது உபநிஷத்து வாக்கியம்.

நியூட்டன், டார்வின், ஐன்ஸ்தீன், ஸ்பென்ஸர், ருதர்போர்டு முதலிய பௌதிகப் பெரும்புலவர்கள் உயிர்களையும், உயிரற்ற பொருள்களையும், வானில் திகழும் ஜோதிகளையும், நுண்கருவிகளும் தொலைக் காட்சிக் கருவிகளும் வைத்துச் சோதித்துத் தாம் கண்ட பேருண்மைகளை உலகத்துக்கு எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார்கள். அந்த உண்மைகளுக்கும், பௌதிக சித்தாந்தங்களுக்கும் முரண்

படாத ஒரு சமயம் உலகத்தில் உண்டு என்றால் அது பாரத ரிஷிகள் கண்ட வேதாந்தம் ஆகும். எங்கும் பரந்து, எதனிலும் ஊடுருவி பராசக்தி நிற்கிறது. நியதி என்பதே அதன் தனிப்பெரும் இலக்கணம். நுண்ணிய ஒரு விதையில் பெரிய ஆலமரத்தின் முழு வளர்ச்சியும் அடங்கி நிற்பதைப்போல் உலகம் முழுவதும் ஒரு மெய்ப்பொருளினின்று தோன்றிப் பரிணமித்தது என்பது வேதாந்தம். பௌதிக ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தவம் செய்து பேருண்மைகளைக் கண்டு ஆனந்தமடையும் பெரும் புலவர்களுக்கு உகந்த சமயக் கொள்கை இதுவேயாகும். மேல் நாட்டுப் புலவர்கள் ஆராய்ச்சி செய்து ஒப்புக் கொண்டிருக்கும் 'எவொலூஷன்' என்கிற வழிமுறைப் பரிணமக் கொள்கைக்கு முரண்படாத சமயக்கொள்கை வேதாந்தம் ஒன்றே. வேதாந்த உபதேசத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் சிற்றறிவு படைத்தவர்கள் அதைக் குறைகூறுவது தவறு.

7

இந்தியப் பண்பாட்டுக்கு மூலவேர் வேதாந்தம். முற்காலத்திலும் இக்காலத்திலும், இந்நாட்டின் சரித்திரத்தில் கண்ட தைரியம், வீரம், தியாகம், பெருமை எல்லாவற்றிற்கும் மூலசக்தி வேதாந்தம். பாரததேசத்தில் ஒவ்வொருவன் உள்ளத்திலும் வேதாந்தம் இப்போதும் ஊன்றி நிற்கிறது. அதைப் புத்துயிரும் வேகமும் கொண்டு முளைக்கச் செய்வது எளிதாகும். புது நாகரிகம், புது

உணர்ச்சிகள், புதுச் சம்பிரதாயங்கள் நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவு புகுந்து நின்றாலும், வேதாந்த மூலவேர் அழியவில்லை. நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கை, பணக்காரன் வாழ்க்கை, ஏழைகளின் வாழ்க்கை, படித்தவர்கள், மூடர்கள், யோக்கியர்கள், அயோக்கியர்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் வேதாந்தம் ஊடுருவி நிற்கிறது. இந்நாட்டில் புகுந்த புறச் சமயங்களும் வேதாந்தத்தினின்று தப்பவில்லை. வேதாந்தம் என்பது இந்திய மண்ணோடு கலந்து நிற்கிறது. இந்த தேசத்தில் வேர் ஊன்றிய எல்லாப் புற மதங்களுமே வேதாந்த சாரத்தை எடுத்துக்கொண்டு தன்மயமாக்கிக் கொண்டிருக்கின்றன. வேதாந்தமே இந்நாட்டு மக்களின் பொதுப் பண்பாடு என்று சொல்லலாம். எந்த மதத்தினராயினும் சரி, இது உண்மை.

வேதாந்தத்திற்கு முதல்நூல் உபநிஷத்து. பழைய நூல்களை நாம் படிக்கும்போது, நேற்று எழுதின புத்தகங்களைப்போல் அவை இருக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக்கூடாது. அவை தோன்றிய காலத்தில் உலகமும், தேசமும், மக்கள் வாழ்க்கையும், தேசாசாரமும் முற்றிலும் வேறுநிலையி லிருந்தன. தற்காலத்தில் விவாதிக்கப் பட்டுவரும் விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு, மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்ட பழைய நூல்களை விமரிசனம் செய்து குழறுபடை செய்வதில் பயனில்லை. ஒவ்வொரு நூலும் அது

தோன்றிய காலத்து வாழ்க்கையை ஒட்டித்தான் பேசும். நம்முடைய கற்பனு சக்தியையும், அறிவையும் செலுத்தி அக்கால வாழ்க்கையை மனதில் தருவித்து வைத்துக்கொண்டு முன்னேர் எழுதிய நூல்களைப் படித்துப் பொருளைக் காணவேண்டும்.

உபநிஷத்துக்களின் முக்கிய கருத்து என்னவென்றால், இவ்வுலகத்தில் தனக்கென்று பொருள் சம்பாதித்துப் பெறக்கூடிய போகங்களினுல் மனிதன் நிலையான சுகம் பெறமாட்டான் என்பதே. வேதத்தில் சொல்லிய வேள்விகளைச் செய்தால் சுவர்க்கம் அடையலாம் என்று அக்காலத்தில் எல்லாரும் உறுதியாக நம்பினுர்கள். அதை ஒப்புக்கொண்டு அதுவும் நிலையான சுகம் பெறும் வழியல்ல என்று உபநிஷத்துக்கள் போதித்தன. உள்ளத்தைப் பரம் பொருளுடன் ஒன்றுபடுத்தி ஆசாபாசத்திலிருந்து விடுவித்துக் கொண்டாலொழிய சுகமில்லை என்று உபநிஷத்து ரிஷிகள் போதித்தார்கள். இந்த உண்மையைப் படிப்படியாக உபதேசிக்கும் நோக்கத்துடன் சொல்லப்பட்ட மந்திரங்கள் சில இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும். ஆனுல் உபதேச முறை படிப்படியாகச் செல்கிறது என்பதைக் கவனத்தில் வைத்து ஆராய்ந்தால், முரண்பாடு தீர்ந்து பொருள் விளங்கும். உபநிஷத்துக்கள் தோன்றிய காலத்தில் ஆசாரியனுடைய கூட்டுறவும், நேரில் அடைந்த வாய்மொழி உபதேசமும் இன்றி வேறு படிப்புக் கிடையாது. வெறும் புத்தகப்படிப்பு அப்போது

இல்லை. அச்சடித்த புத்தகப்பிரதிகள் சங்கதியே அக்காலத்தில் சாத்தியமில்லை.

8

வேதாந்தத்தில் சைவம், வைஷ்ணவம் முதலிய சமயபேதங்கள் இல்லை. பரம்பொருளை எந்தப் பெயர் வைத்துத் தியானிப்பது சிறந்தமுறை என்கிற வாதங்களுக்கு அதில் இடம் இல்லை. சங்கராசாரியர் எழுதிய வேதாந்த நூல்களில் நாராயணன் என்றே ஈசனைக் குறிப்பிடுகிறார். சைவ சித்தாந்த நூல்களில் பரம்பொருளைச் சிவன் என்றே குறிப்பிடுவார்கள். பெயர்களும், தியானத்திற்காக நாம் மனதில் கற்பித்துக்கொள்ளும் அங்கங்களும் சின்னங்களும், பூஜைசெய்யும் மூர்த்திகளும், ஓங்காரமும்கூட, நம்முடைய உள்ளத்தைப் பரம்பொருளின் வழிச் செலுத்துவதற்கு உபயோகப்படும் சாதனங்களே யொழிய வேறல்ல.

"ஏகமூர்த்தி இரு மூர்த்தி
மூன்று மூர்த்தி பலமூர்த்தி
யாகி ஐந்து பூதமாய்
இரண்டு சுடராய் அருவாகி
நாகம் ஏறி நடுக்கடலுள்
துயின்ற நாராயணனே!"

"முனியே! நான்முகனே!
முக்கண்ணப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்
கருமாணிக்கமே! என் கள்வா!"

என்று பிரம்மன் சிவன் விஷ்ணு என்கிற வித்தியாசமின்றி வைஷ்ணவப் பிரபந்தமாகிய திருவாய்

மொழியில் நம்மாழ்வார் பாடினர். எந்தச் சமயத்தில் வளர்ந்த ஹிந்துக்களுக்கும் வேதாந்தம் பொது. சைவ, வைஷ்ணவப் பிரபந்தங்கள் எல்லாமே வேதாந்தத்தைத்தான் பல வழியில் விளக்கு கின்றன.

தேசபக்தர்கள் பாடும் 'அச்சமில்லை' 'ஜய முண்டு' 'சங்கு' 'ஜயபேரிகை' முதலிய விடுதலைப் பாட்டுக்களும் வேதாந்தமே. வேதாந்த விதையை அனைவருக்கும் தந்து நாட்டைப் பண்படுத்தி விளை யுயர்ந்த நல்ல பயிரை வளர்க்கவே பாரதியார், பழைய வேதாந்தத்தைத் தேசீயப் புதுமணத் துடன் கலந்து அந்த அற்புதமான பாட்டுக்களைப் பாடித்தந்தார். உண்மை என்பது சமயமும் கலையும் பண்பாடும் தைரியமும் ஊக்கமும் தேசீயமும் அனைத்தும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஒரு பொருள். வேதாந்தத்தில் உபதேசிக்கப்படும் வாழ்க்கைமுறை உலகத்தை விட்டுவிடுவது அல்ல. சுயநலத்தையும் சுகபோகப் பற்றுக்களையும் அபிமா னத்தையும் தைரியமாகக் களைந்தெறிந்து, குடும்பத் துக்கும் சமூகத்துக்கும் தேசத்துக்கும் செய்ய வேண்டிய எல்லாக் கடமைகளையும் அஞ்சா நெஞ்சு டன் செய்து, வாழ்க்கையை நடத்துவதற்குச் சாதனமான ஆத்மசக்தியை வேதாந்தம் தரும். வேதாந்தம் முயற்சிக்குப் பகை என்று சிலர் தவருக எண்ணுகிறார்கள். சுயநல முயற்சிகள் வேறு; சமுதாய நலனுக்காகச்செய்யப்படும் முயற்சி வேறு. சுயநல முயற்சிகளுக்கு வேதாந்தம் பகை. சமுதாய

நன்மைக்காகச் செய்யவேண்டிய முயற்சிகளுக்கு வேதாந்தம் நல்ல சாதனமாகும். பற்றற்ற முயற்சியே சமுதாயத்துக்குத் தொண்டு செய்ய விரும்பும் மக்களுக்கு வேண்டும். ஆசையும் பற்றும் மயக்கத்தை உண்டாக்கி வேலையைக் கெடுக்கும். போட்டி வாழ்க்கைக்கு வேதாந்தம் பகையாகும். சமுதாயிக வாழ்க்கைக்கு அதுவே நல்ல சாதன மாகும்.

௯

ஞானத்திற்கு முதற்படி நான் வேறு, தேகம் வேறு என்கிற உறுதியான உணர்ச்சியைப் பெற வேண்டும். உடலுக்குள் உடலைத்தவிர ஆத்மா என்ற ஒரு பொருள் உண்டு; அது உடலினின்றும் வேறுபட்ட ஒரு பொருள்; உடலின் லக்ஷணங் களையே ஒரு தனிப்பொருளாக அமைத்துக் கொண்டு உபசாரமாகப் பேசிவருவதல்ல. உடல் அழிந்ததும் அதனுடன் அதன் லக்ஷணமான ஆத்மாவும் அழிந்துபோகுமா, அல்லது தனிப் பொருளாகி வேறுபடுகிறதா? தனிப் பொருளா யிருப்பினும், அது உடலைப்போல் அழிந்துபோகும் பொருளா? அல்லது தெய்வீக சாசுவதப் பொருளா? இந்த விஷயத்தைப்பற்றி மக்களுக்கு உறுதியான நம்பிக்கை இல்லாமலிருப்பதே அவர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் எல்லாக் குறைகளுக் கும் காரணம்.

உடலும் புலன்களும் அல்லாத வேறு ஒரு பொருள் தனக்குள் இருக்கிறது என்பதை அறி

வுள்ள மனிதன் உறுதியாக உணர்ந்தானுனல், ஞான மும் பக்தியும் சத்தியமும் பற்றற்ற வாழ்க்கையும் எளிதில் தோன்றும். தோன்றியபின் குறைவுபடா மல் நிற்கும். அதற்காகவே உபநிஷத்துக்களில் பரமாத்மாவைப்பற்றிச் சொல்லுவதோடு, ஜீவாத்மா வைப்பற்றிப் பலவேறு விதமாகத் திரும்பத்திரும்ப விவரிக்கப்படுகிறது. உடலைத் தவிர்த்து வேறு ஏது மில்லை என்ருல் வேதாந்தமில்லை. சரீரம் வேறு சரீரி வேறு என்று சந்தேகமற உணர்ந்தால் வேதாந்தத் தில் சொல்லப்படும் பரம்பொருளைப்பற்றிய விஷயங் களும் வேதாந்த வாழ்க்கையின் சிறப்பும் விளங்கும்.

10

வேதாந்த வாழ்க்கைக்கு நம் உள்ளத்தில் மறைந்து நிற்கும் நம் ஆத்மாவை முதலில் 'காண' வேண்டும். 'காண்பது' என்ருல் சந்தேகம் முற்றி லும் அழிந்து உண்மையைப் பூரணமாக உணர்வ தாகும். உணர்ச்சியற்ற அறிவும் ஆராய்ச்சியும் 'காண்ப'தாகாது. பூரண உணர்ச்சிக்கு நற்குண மும் சீலமும் வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி கிளம்பும். நமக்கெதிரில் நிற்கும் சுவரையோ மலையையோ பார்க்கும்போது, யோக்கியன் அயோக்கியன் இரு வருக்கும் அது காணப்படும். ஆனபடியால், ஒரு பொருளைப் பார்க்க வேண்டுமானுல் புலனடக்கம், அமைதி இவையெல்லாம் என்னத்திற்கு? ஆத்ம ஞானம் அடைவதற்கு ஆசாரியன் உதவியும் படிப்புமே அல்லவா வேண்டியவை? இவை இருந்

தால் வேறு குற்றங்கள் என்ன செய்யும்? இருக்கும் ஒரு பொருளைப் பார்ப்பதற்குச் சீலம் என்னத்திற்காக? இவ்வாறு கேட்கலாம். இது சரியல்ல. மற்ற பொருள்களைப்பார்த்து உணர்வதற்கும் ஆத்மாவைத் தன் உள்ளத்தில் காண்பதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

ஆத்மா என்பது உடலில் ஓர் அவயவத்தைப் போன்றதல்ல. அதற்குத் தனி இடமில்லை. உடலையும் உள்ளத்தையும் ஊடுருவிக் கலந்து நிற்கிறது. உள்ளம் தெளிவு அடைந்தாலொழிய உள்ளத்துள் கலந்து மறைந்திருக்கும் பொருள் உருக்கொண்டு கோசரமாகாது. புறத்தில் நிற்கும் ஒரு பொருளைப் பார்க்கும் முறை வேறு, உள்ளத்தில் ஊடுருவி மறைந்து நிற்கும் ஒரு பொருளைக் காணக்கூடிய முறை வேறு. மனம் தெளிந்தாலொழிய உள்ளத்திற்குள் ஊடுருவி நிற்கும் ஒரு பொருள் வெளிப்படாது. மனம் தெளிவு படுவதற்குச் சீலமும் பற்றற்ற நிலையும் அமைதியும் வேண்டும். இந்தக் காரணத்தை நன்றாக ஆராய்ந்து உணர்ந்தால் உடலிலுள்ள ஆத்மாவைக் காண நல்லொழுக்கமும் சுத்தமான உள்ளமும் ஏன் வேண்டும் என்பது விளங்கும். சில வேதாந்திகள் ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கரும மார்க்கம் என்று மூன்றாகச் சொல்லும் முறைகள் எல்லாம் ஒன்றே என்பதும் விளக்கமாகும்.

ஆகவே, மனமும் இந்திரியங்களும் சரிவர அடங்கப் பெறவேண்டும். இதற்கு விவேகம்

வேண்டும். புத்தி கலக்கமற்று ஒளிபெற வேண்டும். ஒளி பெற்ற புத்தியின் வேகம் தன்னைத்தான் அறியும் துறையில் உள்நோக்கிச் செல்லவேண்டும். ஒரு காலத்தில் மன அமைதி உண்டானாலும் திரும்பத் திரும்பக் கலக்கம் ஏற்படும். இடையரூத கவனத்துடன் புத்தி, மனம், இந்திரியங்கள் இவைகளை அடக்கி ஆளவேண்டும். இந்த முயற்சிக்குத்தான் யோகம் என்று பெயர். இந்த நிலையை அடைந்தால் உள்ளத்தில் மறைந்து நிற்கிற ஆத்மாவைக் காணப் பெறலாம். யோகம் என்பது ஏதோ மந்திர யுக்தி என்று எண்ணக்கூடாது. பௌதிக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் புலவர்களின் வாழ்க்கை முறையையும் ஆராய்ச்சிச் சாலையில் அவர்கள் வேலை செய்யும்போது அவர்களுடைய கவனமும் ஜாக்கிரதையும் எவ்வாறு இருக்கிறதென்பதையும் பார்த்தால், ஆத்ம ஆராய்ச்சிக்கு வேண்டிய கவனமும் அமைதியும் என்ன என்பது விளங்கும். யோகம் என்பது இதுவேயொழிய ஒருவித ஜாலம் அல்ல. ஆசையும் கோபமும் பற்றும் கவலையும் தீர்ந்த தெளிவுநிலைக்குப் பெயர் யோகம்.

11

உலகம் சர்வேசுவரனுடைய மாயை என்று வேதாந்திகள் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதன் பொருள் உலகம் பொய் என்பதல்ல. உலகம் சரியான உண்மை, பொய்யல்ல. மாயையைப் பற்றியும், ஆத்மாவைப் பற்றியும் பரம்பொருளைப் பற்றியும் உபதேசம் செய்த பெரியோர்கள்

அனைவரும் உலகம் உண்மை என்றே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள். உபதேசத்திற்கு மாறாக நடக்கும் வேஷதாரிகளைப்பற்றிச் சொல்லவில்லை; பூரண மெய் வாழ்க்கை நடத்திய ஞானிகளின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலே, உலகமும் உலக வாழ்க்கையும் வினைப்பயனும் உண்மை என்றே அவர்கள் எண்ணினார்கள் என்பது சந்தேகமற உறுதியாகிறது. இப்படியிருந்தும், அவர்களுடைய கொள்கையானது எல்லாம் மாயை, எல்லாம் ஈசுவரனுடைய உருவமே என்றால், இதற்குப் பொருள் வேறாக இருக்கவேண்டும்.

ஈசனே சகலமும் என்றால் அனைத்தின் உயிரும் அவனே என்று பொருள். உடலுக்கு ஆத்மா எவ்வாறோ அவ்வாறு எல்லாப் பொருள்களுள்ளும் எல்லா உயிர்களுள்ளும் ஈசன் ஊடுருவி அந்தர்யாமியாக நிற்கிறான். நான் போனேன், நான் வந்தேன், நான் செய்தேன் என்றால், அது கேவலம் உடலின் செயலானபோதிலும், உடலுக்குள் எல்லாவற்றையும் நடத்தும் ஆத்மாவின் கருமமேயாகும். அதுபோலவே ஆத்மாவுக்கு ஆத்மா ஈசன். ஆத்மாவின் செயல் ஈசனுடைய செயல். ஆகையால் நம்முடைய செயல் ஈசன் செயல். ஈசனும் உண்மை, ஈசன் ஊடுருவி நிற்கும் சகல உயிர்களும் உண்மையே. உயிரே உண்மை; ஆயினும் உடலும் உண்மை. அவ்வாறே உயிரும் உண்மை, உயிருக்கு உயிரான ஈசனும் சிறப்பான உண்மை.

வெயிலினுல்தான் நிழல் உண்டாகிறது. ஆன போதிலும் நிழல் பொய்யல்ல, உண்மையே. உடலை உண்மையாகக் காண்கிறேமாயினும் உடலுக்கு உயிரும் உண்மையும் தருவது கண்ணுக்குக் காணுத உயிரே அல்லவா? ஆத்மா இன்றி உடல் உயிரற்ற சவமாகிவிடும். அதைப்போலவே ஈசன் எல்லா உயிர்களுக்கும் உயிராகி நிற்கிறுன். உடலுக்குள் நிற்கும் ஆத்மாவுக்குப் பரம்பொருளே இன்றியமையாத அந்தராத்மா. ஆகவே, உயிர்களெல்லாம் பரமாத்மாவுக்குத் திவ்விய சரீரங்கள். சர்வ வியாபகமான பரம்பொருளுக்கு உலகம் முழுதும் ஒவ்வொரு தனிப்பொருளும், சரீரமாகும். அனைத்தும் சேர்ந்து பரமனுக்கு ஒரு அகண்ட சரீரமாகும். அவையே அவனுக்குத் தனித்தனியான சரீரங்களுமாகும். அந்தராத்மா இன்றி எல்லா உயிரும் வெறும் சவம் போலாகும். நீராவி, மின்சாரம் காந்தம் அணுச்சக்தி முதலிய இயற்கைச் சக்திகளுக்கும் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளே மூலாதாரம்.

வேதாந்த உபதேசத்தில் மாயை என்றுல் அனைத்தும் பொய், நாம் ஏதேனும் செய்துகொண்டு போகலாம் என்றல்ல. அனைத்தும் உண்மை, அனைத்தும் நியதிக்குட்பட்டது, அனைத்தும் ஈசன் உருவம் என்பதே வேதாந்தம்.

12

உடலுக்கு உயிர்தரும் பொருள் ஆத்மாவாகும். ஆத்மாவுக்கு உயிர்தரும் பரம்பொருள்

அல்லது அந்தராத்மா ஒன்றேயாயினும் ஜீவன்கள், தனி ஜீவன்களாக வாழ்கின்றன. இதைத்தான் வேதாந்திகள் மாயை என்பது. கல்வி கற்றவன், பாமரன், வீரன், கோழை, பலவான், நோயாளி, உயர்ந்தோன், தாழ்ந்தோன் இன்னும் எல்லா ஜீவ கோடிகளிலுமே அந்தராத்மாவாக எல்லாவற்றையும் நடத்திக்கொண்டு நிற்பது ஒரே பரம்பொருள்.

நமது ஆசைகள், பாசங்கள், சுகதுக்கங்கள் இவைகளில் ஆத்மாவானது மறைந்துபோய்க் கிடக்கிறது. மறைந்திருக்கும் ஆத்மாவினுள், அதன் ஆத்மாவாகி நிற்கும் அந்தராத்மா இரட்டைத் திரைக்குப்பின் நம்முடைய அறிவுக்கு எட்டாமல் முற்றிலும் மறைந்து நிற்கிறது. மாசுபடாத புனிதப் பரம்பொருளான அந்தராத்மா மாசுகளின் மத்தியில் மூடிக் கிடக்கிறது. மனத்தை ஒருமைப் படுத்திப் புலன்களை அடக்கி, புறப்பொருள்களி னின்று உள்ளம் மீண்டு நின்றால், உள்ளத்தில் குடி கொண்டுள்ள ஆத்மாவையும், ஆத்மாவுக்கு ஆத்மா வான பரம்பொருளையும் காணப் பெறலாம். பரமாத்மாவே அனைத்தினுள்ளும் நின்று நடத்து வது என்பதை உறுதியாக உணர்ந்துவிட்டால் இன்பதுன்பங்கள் மறைந்து போகும். இதுவே வேதாந்தம்.

13

பரம்பொருளுக்கும் ஜீவன்களுக்கும் உள்ள உண்மைத் தொடர்பு வேறொரு விதமாகவும் உபநிஷத்தில் விளக்கி உபதேசிக்கப்படுகிறது.

வெயிலையும் நிழலையும் பார்க்கிறோம். வெயிலின் வழியில் நிற்கும் பொருளானது நிழலை உண்டாக்கு கிறது. வெயிலுக்கு ஏற்பட்ட தடை அல்லது குறையே நிழலின் வடிவத்தை உண்டாக்குகிறது. வெயிலுக்கு வடிவம் இல்லை. அது வழிவிட்ட இடத்தி லெல்லாம் பரந்து சமப்பிரகாசம் வீசுகிறது. நிழ லுக்குக் கிலுப்தமான வடிவம் உண்டு. ஆனால் ஒளிப் பொருளாகிய வெயிலின் குறையைத்தான் நிழலாகக் காண்கிறோம். வெயிலே நிழல் ஆகிறது, குறையும் தடையுமின்றி நின்றால், வெயில் சமப்பிரகாசமாக வீசும். தடைப்பட்ட இடத்தில் நிழல் தோன்று கின்றது. ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் சமப் பிரகாசத்தினிடையில் தோன்றுகிற நிழல்களாகும். தடையை நீக்கியவுடன் நிழலும் வெயிலும் ஒன்றாகி விடும். நிழலுக்குக் காரணமும் அதன் உண்மைப் பொருளுமாகஇருப்பது வெயில்தான். நிழலைப்போல் ஜீவாத்மா. வெயிலைப் போன்றது பரம்பொருள். இரண்டும் உண்மை. இரண்டும் ஒன்று.

14

மோக்ஷம் அடைவது என்றால் ஓர் ஊரிலிருந்து வண்டி ஏறி அல்லது நடந்துபோய் இன்னொரு ஊரை அடைவதுபோலல்ல. அந்தராத்மாவும் தானும் ஒன்றே என்கிற ஞானம் உண்டாகி வெயிலும் நிழலும் ஒன்றாதல்போல் உண்மையை அடைதலே மோக்ஷம். வேற்றுமை உணர்ச்சி தீர்ந்து அனைத் தும் ஒரு பரமாத்மாவின் உடல் என்பதை உணர்தல் மோக்ஷம். இதனால் சில வேதாந்திகள் அறிவே

மோக்ஷம் என்பார்கள். 'மோக்ஷம்' என்றால் வடமொழியில் 'விடுதலை' என்றே பொருள். 'விடு' என்ற தமிழ் மொழியினின்று 'விடுதலை' அல்லது 'வீடு' என்ற மொழி உண்டாவதுபோலவே 'மோக்ஷம்' என்கிற சம்ஸ்கிருத பதத்தின் தாது 'விடு' என்ற பொருள் கொண்ட ஒரு வடமொழி வினைச்சொல். மோக்ஷம் அல்லது விடுதலை என்பது ஒரு நிலை. ஓர் ஊரோ, உலகமோ, கட்டிடமோ, மாளிகையோ, தோட்டமோ அல்ல. ஆகையால் நம்மாழ்வார் ;

"நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்லிந்திரியம் எல்லாம் ஈர்ந்து
ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும்பாழ்,
உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து
சென்று, ஆங்கு இன்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்,
அன்றே அப்போதே வீடு,
அதுவே வீடு, வீடு ஆமே!"

"அதுவே வீடு, வீடு பேற்று
இன்பந்தானும் அது ; தேறி
எதுவே தானும் பற்றின்றி
யாது மிலிக ளாகிற்கில்
அதுவே வீடு, வீடு பேற்று
இன்பந்தானும் அது ; தேறாது,
எதுவே வீடு? ஏது இன்பம்? என்று
எய்த்தார் எய்த்தார் எய்த்தாரே!"

என்கிற பாசுரங்கள் பாடினார்.

பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள உண்மைச் சம்பந்தத்தை உணர்ந்தோமானால், இவ்வுலகத்தில்

ஜீவனுக்கும் ஜீவனுக்கும் உள்ள வேற்றுமை யுணர்ச்சி அற்றுப்போகும். வேற்றுமையுணர்ச்சி நீங்குவது தூக்கத்தினின்று விழிப்பதுபோல். இரவில் ஒருவன் கனவு காண்கிறான். அதில் தோன்றும் சம்பவங்களினால் கஷ்டப்படுகிறான். அவனுக்கு எவ்வாறு கஷ்ட நிவாரணம் உண்டா கும்? தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து கனவைக் கனவென்று காண்பதே நிவாரணம். அதுபோல் ஆத்மாவைப்பிடித்து நிற்கும் வேற்றுமை உணர்ச்சி யினின்று விழித்தெழுந்து பொறாமை கோபம் முதலிய கஷ்டங்களினின்று விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆகையால் "எழு! எழு! விழித்தெழு!" என்று உபநிஷத்துக்கள் முழங்குகின்றன. தன் ஆத்மாவின் உயிராய் நிற்பது பரம்பொருள் என் கிற ஞானம் பெறுவது நல்ல தூக்கத்தினின்று விழிப்பது போன்ற ஒருவித நிலைமை மாறுபாடு. அடுத்த அறையில் சுப்பன் இருக்கிறான் என்று சொல்லக் கேட்டு விஷயத்தைச் சும்மா தெரிந்து கொள்வதுபோல் அல்ல. மனோபாவமே முற்றும் மாறவேண்டும்.

தூக்கத்தினின்று விழிப்பது சுலபம். ஆனால் சம்சார மாயை என்கிற பெருந்தூக்கத்தினின்று விழிப்பது எளிதன்று. விழிக்கவேண்டும் என்கிற விருப்பம் உள்ளத்தில் முதலில் பொங்க வேண்டும். மறுபடி வேற்றுமை யுணர்ச்சியில் விழாமல் காத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

அறியாமையால் தூண்டப்பட்டு அநித்திய

சுகங்களை அடைய விரும்புகிறோம். அதற்காகப் பலகாரியங்கள் செய்கிறோம். விரும்பிய சுகங்களை அடையாததனால், அல்லது அடைந்து விட்டுப் பிறகு இழந்ததனால், கோபம் துவேஷம் துக்கம் இவைகளை உண்டாக்கிக் கொள்கிறோம். இதனால் முன்னைவிட அறியாமை அதிகரிக்கிறது. 'தான்' என்கிற அகங்காரமும் 'தனது' 'தனக்கு' என்ற பொருட் பற்றும் ஆசையும் முன்னைவிட அதிகமாகின்றன. இவ்வாறு உண்மையினின்று வரவர வெகுதூரம் விலகிப்போய் விடுகிறோம். அப்படிப் போகாமல், உண்மையை அணுகுவதே விடுதலைக்கு வழி. இதற்கு அடக்கமும் சீலமும் அவசியம். உள்ளத்திலும் நம்மைச் சுற்றிலும் இருப்பது பரம்பொருள் என்றறிந்து அந்தப் பரம்பொருளைச் சிரத்தையுடன் தியானித்தல் அவசியம்.

> காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்
> நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை,
> நோக்க நோக்கக் களியாட்டம்!

என்று பாரதியார் ஆடிப்பாடியது இதைத்தான்.

சமூகச் சேவைக்கு முக்கியமான தடை சுய நலம். இந்தத் தடையானது ஞானத்தால் ஒழியும். பூரணமான ஞானம் அடையாமற்போனாலும் முயற்சியை விடலாகாது. அரை குறையாக அடைந்த ஞானமும் ஓரளவு நன்மை தரும். முயற்சியினாலேயே மாசுகள் கொஞ்சம் நீங்கப்பெற்று நற்குணங்களை அடைவோம். வாழ்க்கையில் நாம் செய்யப்பார்க்கும் பல பாபச் செயல்களிளின்றும்

தப்புவோம். வெற்றியடையா விட்டாலும் முயற்சியே நம்மை மேல் நிலைக்கு உயர்த்தும்.

15

உடல் என்பது உயிர் என்கிற எஜமானனுக்கு ஒரு கருவி, நல்ல அழகிய கருவி. கருவியும் எஜமானனும் ஒன்றாக மயங்கி நிற்கும் ஒரு வியப்பான கருவி. அவ்வாறே, உடலுக்கு எஜமானனான ஜீவாத்மாவும் வேறொரு எஜமானனுக்கு ஒரு கருவியேயாகும். அந்தக் கருவியை ஆள்வது அதனுள் அந்தர்யாமியாய் நிற்கும் பகவான்.

உளியும் அரமும் தச்சனுக்குப் பயன்பட வேண்டும். அதைப்போலவே உடலும் உடலில் சூக்ஷ்மமாக வேலை செய்யும் புலன்களும் உடலுக்குள் எஜமானனாக நிற்கும் ஆத்மாவுக்குத் துரோகம் செய்யாமல் நற்பணி செய்ய வேண்டும். அந்த ஆத்மாவும் தனக்குள் கோயில் கொண்டிருக்கும் பகவானுக்கு ஒரு நற்கருவியாக அமைந்து ஒழுகவேண்டும்.

உடல், வாக்கு, மனம் இவைகளைக் கொண்டு வினைகள் செய்யப்படுகின்றன. இந்த வினைக்கு இந்தப் பயன் என்பது இயற்கைச் சாசனம். காரண - காரிய சம்பந்தம் என்பது ஒரு மாறாத நியதி. பயன் என்பது வினையில் மூடிக்கிடக்கிறது; விதையில் மரம் மூடிக் கிடப்பதுபோல். வெயிலில் நீர் உலர்ந்து ஆவியாகிப் போகும். இதை மாற்ற முடியாது. வெயிலும் நீரும் சேர்ந்தால் பின்னால் கிளம்பப்போகும் பயன் அந்தச் சேர்க்கையிலேயே

கிடக்கிறது. இதைப்போலவே அனைத்தும். ஆழ்ந்து யோசித்து உணர்ந்தால் உலகமெல்லாம் இப்படியே மாறாத நியதிப்படி வினையும் பயனுமாக நடைபெறு வதைக் காண்போம். இதுவே 'விதி' என்று சொல்லப்படும் வேதாந்த தத்துவம். 'விதி' என்றால் நியதிக்கு அடங்காத ஒரு அநியாய நிகழ்ச்சி என்றாவது தலையில் யாரோ எழுதிய எழுத்து என்றா வது பொருள் கொள்ளுவது தவறு.

விதிவசம் என்பதின் உண்மைப்பொருள் செய்த வினையின் பயனைத்தான் நாம் எதிர்பார்க்க வேண்டும் என்பது. ஒரு வினையானது ஒருக் காலும் தன் பயனை விளைவிக்காமல் போகாது. செய்த வினையினால் அதன் உண்மைப் பயன்தான் உண்டாகும். வேறொன்று உண்டாகாது. அனைத் திலும் ஈசன் இருக்கிறான். ஆகையினால் ஒவ்வொன் றும் நியதிப்படியே நடக்கும். இதை மாற்றவே முடியாது. ஒரு பயனை வேண்டின் அதைத்தரும் வினையைச் செய்யவேண்டும். ஒன்றைச் செய்து வேறொரு பயனை அடைய முடியாது. செய்யவேண் டிய செயலைச் செய்தால் பயனுண்டு. இல்லாமற் போகாது. இதுவே ஆத்மாவின் சுதந்தரம்.

மனோ வாக்குக் காயம் மூன்றுமே தத்தம் வினை களைச் செய்யும். எண்ணிய எண்ணங்கள், பேசிய பேச்சுக்கள், செய்யும் செய்கைகள் எல்லாம் தத்தம் பயனை விளைவிக்கும். நியதியை ஏமாற்ற முடியாது.

எல்லாம் விதிவசம் என்றால் அறிவும் மனித யத்தனமும் பயன்படாது, சும்மா இருத்தலே நலம்

என்பதல்ல. "ஆமடா, விதிவசந்தான்! அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது ஈசனுடைய விதி! ஆரோக்கிய சாத்திரமில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி!" என்று பாரதியார் நன்ருகக் குத்திச் சொல்லி இதை விளக்குகிருர்.

காரணங்கள் இருக்க அதை நாம் அறியாத போது 'விதி', 'அதிருஷ்டம்', 'விதிவசம்', என்கிருேம். ஆனல் இது அறிவைச் செலுத்தாத குற்றத்தை ஒப்புக்கொண்டு பயனைக்கண்டு வருத்தப் படுவதே யொழிய வேறன்று. 'அதிருஷ்டம்' என்ருல் காணப்படவில்லை என்று பொருள். அவ்வளவே யொழிய, காரணம் இல்லை அல்லது நியதிக்கு உட்படாதது என்றல்ல.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மூன்று விதமான பயன் உண்டாகும். வெளியுலகத்தில் உண்டாகும் விளைவு ஒன்று. நம்முடைய உடல், புலன், உள்ளம் இவைகளுக்கு அச்செய்கையினல் உண்டாகும் பயிற்சிப் பயன் அல்லது பழக்கம் இரண்டாவது. மூன்ருவதாக உள்ளத்தினுள் இருக்கும் ஆன்மாவுக்கு அதனல் உண்டாகும் முன்னேற்றம் அல்லது பிற்போக்கு. செய்யும் செயலைப்போலவே எண்ணும் எண்ணங்கள், பக்தி, பிரார்த்தனை, பச்சாத்தாபம், இவை யனைத்துக்கும் இயற்கை நியதிப்படி இந்த மூன்று விதமான விளைவுகளும் உண்டாகும். இந்த மூன்று விளைவுகளும் நல்ல விளைவாக இருக்கலாம், அல்லது நஷ்ட விளைவாக இருக்கலாம், அது செயலின் தன்மையைப் பொறுத்தது.

16

முன் ஜென்மங்களில் செய்த கருமங்களினாலும் பற்றின பற்றுக்களினாலும் நாம் சில சுபாவ குணங்களுடன் பிறக்கிறோம் என்பது ஹிந்துமதக் கொள்கை. எவ்வாறாயினும் இந்தப் பிறவிச் சுபாவங்களை முழுதும் அடக்கிவிடலாம் என்று எண்ணித் துறவியாகப் போவதில் பயன் பெறமாட்டோம். பக்குவமடையாமல் துறவியாவது வெறும் வேஷமாய் முடியும்.

ஒருவன் தன் பிறவிக் குணங்களினின்று விடுதலை அடைவதும் அல்லது முன்னிருந்த பந்தத்திற்கு இன்னும்கூடச் சேர்த்து அதிகமான பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதும் அவன் எப்படி நடந்துகொள்ளுகிறானோ அதைப் பொறுத்திருக்கிறது. ஆனால் சுபாவ குணங்களை சீர்ப்படுத்திக் கொண்டு விடுதலை அடைவதற்கு வேண்டிய முயற்சி சுதந்திரம் ஜீவனுக்கு உண்டு,

"ஐயமுண்டு பயமில்லை, மனமே!
பயனுண்டு பக்தியினாலே,
புயமுண்டு குன்றத்தைப் போலே,
மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்
விதியுண்டு, தொழிலுக்கு விளைவுண்டு,
அலைபட்ட கடலுக்கு மேலே-சக்தி
அருளென்னும் தோணியினாலே
கரையுற்றுத் துயரற்று விடுபட்டு
ஐயமுண்டு பயமில்லை, மனமே"

என்று பாரதியார், கரும நியதியினால் ஏற்படும் ஆத்ம சுதந்திரத்தை எடுத்து விளக்கிப் பாடுகிறார்.

17

உடலும், ஆத்மாவும், ஆத்மாவுக்கு ஆத்மாவான பரமாத்மாவும் ஆகிய மூன்று பொருள்களின் பரஸ்பர சம்பந்தம் என்ன என்பதை உபதேசிக்கும்போது மூன்றும் பொருளான பரமாத்மாவின் இலக்கணங்கள் மாயையில் கிடக்கும் நம்முடைய அறிவுக்குப்பூரணமாக எட்டாதபடியினுல், வேதாந்த ஆசாரியர்கள் பலவேறு உபதேச முறைகளைக் கையாள்கிருர்கள்.

உடலுக்கு உடல் தன்மையைத் தருவது ஆத்மா. ஆத்மாவுக்கு ஆத்மத் தன்மையைத் தருவது பரமாத்மா. உடலில் அதன் உயிரைத் தாங்கி நிற்பது ஆத்மா. ஜீவாத்மாவின் ஒப்பற்ற திவ்விய சொரூபத்தைத் தாங்கி நிற்பது பரமாத்மா. ஜீவ லோகத்தில் உடலும் உயிரும் சேர்ந்து சுகமாகவும் ஆனந்தமாகவும் ஒன்ருய் இருப்பதுபோல, ஜீவாத்மாக்கள் தம் உயிராகிய பரமாத்மாவுடன் யாதொரு குறையும் அறியாமையும் வேற்றுமையுமின்றி ஒன்ருகிச் சுகமாகவும் ஆனந்தமாகவும் இருப்பது மோக்ஷம். இவ்வாறு பரமாத்மாவுடன் ஒன்று சேர, சீலமும் அடக்கமும் பக்தியும் வேண்டும். இது சில ஆசாரியர்களின் விளக்கம்.

பரமாத்மாவின் நிழலே ஜீவாத்மா. அறியாமையால் நிழல் வேறு, பொருள் வேறு என்கிற உணர்ச்சி உண்டாயிருக்கிறது. ஆசை, பற்று,

கோபம், துவேஷம் இவைகளால் இந்த வேற்றுமை உணர்ச்சி பெருகிக் கொண்டே போகிறது. அறிவு உண்டானல் இரண்டும் ஒன்ருகிவிடும். சூரியனும் தண்ணீரில் காணும் சூரிய பிம்பங்களும் போல் வேற்றுமை. தண்ணீரை எடுத்து விட்டால் சாயைகள் இல்லை. பிம்பம் சூரியனுடன் ஒன்று பட்டுப் போகிறது. அவ்வாறே ஜீவாத்மாக்களான பிம்பங்கள் பரமாத்மாவுடன் ஒன்றுபட்டுப் போகும். இதுவே விடுதலை. இதற்கு வேண்டிய பூரண அறிவை அடைய, சீலமும் பக்தியும் அடக்கமும் அமைதியும் வேண்டும். புலன்கள் அவ்வளவும் இரவில் தூங்கும்போது எவ்வாறு உயிரில் அடங்கி முற்றிலும் மறைந்து போகின்றனவோ, அவ்வாறு அறிவடைந்த ஜீவன்கள் பரம்பொருளில் அடங்கி ஒன்றுபட்டுப் போய்விடுகின்றன. இது சில ஆசாரியர்கள் விளக்கும் முறை.

இவ்வளவே துவைத விசிஷ்டாத்துவைத சைவ சித்தாந்த முறைகளிலுள்ள விளக்க-வேறுபாடுகள். இந்த வேறுபாடுகளினல் கலவரப்பட வேண்டிய காரணமில்லை. விளக்க முறைகள் வேறுபட்டாலும் விடுதலைக்கு வழி என்று சொல்லப்பட்ட வேத வாழ்க்கை ஒன்றே.

வேதாந்த உணர்வு அடைந்தவன், அதாவது 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்' கண்டவனுடைய வாழ்க்கை எவ் வாறு இருக்கும் என்ருல், தன் உள்ளத்திலும் சுற்றி

யுள்ள உலகத்திலுமுள்ள ஒவ்வொரு சேதன அசேதனப் பொருளிலும் பரம்பொருள் இருப்பதை எப்போதும் நினைவில் வைப்பான். காமம், குரோதம்,ஆசை என்ற வேகங்களுக்கு உள்ளத்தில் இடங்கொடுக்கமாட்டான். பிறப்பினுலோ அல்லது சந்தர்ப்பத்தினுலோ, அல்லது தான் அடைந்த ஸ்தானத்தின் பயனுகவோ சமுதாயத்தில் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சுயநலப் பற்றின்றிக் கண்ணும் கருத்துமாகச் செய்வான். இந்திரியங் களைக் காத்து வேலை ஆகாரம் ஓய்வு விளையாட்டு தூக்கம் இவைகளில் நியமத்தோடு பரிசுத்த வாழ்க்கை நடத்துவான். கஷ்டங்களைக் கண்டு மனங்கலங்காமல் துயரம் மகிழ்ச்சி எதுவரினும் தைரியமும் அமைதியும் இழக்காமல் இருப்பான்.

இந்த அட்டவணை எனக்கு என்ன பயன்படும், ஞானிகளுக்குத்தான் சாத்தியம் என்று திகைக்க வேண்டியதில்லை. இந்த முறையில் எடுத்த சிறு முயற்சியிலும் நல்ல பயனுண்டாகும். நஷ்டம் கிடையாது. பத்தியம் தவறினுல் மருந்தானது தீமையே விளைவிக்கும் என்கிற வைத்திய சாத்திர நியதியைப்போல் அல்ல. தரும வாழ்க்கை முயற்சி யில் குற்றங்குறைகள் ஏற்பட்டதனுல் அபாயம் ஏதுமில்லை.

மறுமைக்கு நல்லதாகும் என்பதில் ஒருவனுக்கு என்ன ஊக்கம் பிறக்கும்? அடுத்த ஜென்மத்தில் பழைய நினைவுகள் ஒன்றுமில்லாமல் அல்லவோ நாம் பிறப்போம்? முன் ஜென்மத்து விஷயங்கள்

இப்போது நினைவில்லை. இந்த ஜென்மத்தின் நிகழ்ச்சிகளின் நினைவு அடுத்த ஜென்மத்தில் இருக்கப் போவதில்லை. ஆகவே நன்மை செய்தால் என்ன, தீமை செய்தால் என்ன? தற்கால இன்பத்தைத் தேடிச் சுகமாக வாழ்வோமே, அடுத்த பிறவியில் நான் பிறந்தால், அப்போது நான் வேறு மனிதன். அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நினைவு இருந்தாலல்லவோ அவனும் நானும் ஒன்று? அவனுக்காக நான் ஏன் சிரமப்பட வேண்டும்? மரணத்தோடு இந்த வாழ்க்கையின் நினைவுகள் முடிவு அடையுமல்லவா? இவ்வாறெல்லாம் ஆட்சேபிக்கலாம்.

இந்த ஆட்சேபணை சரியல்ல. சுயநலமும் தற்கால இன்பமும் எந்த மனிதனுக்கும் உண்மையில் திருப்தி தருவதேயில்லை. எல்லாரும் தருமத்தை விட்டுவிட்டால் உலகம் வரவரக் கெட்டுப் போய்ப் பாழாக முடியும். இதைப்பற்றிச் சந்தேகமில்லை. இதுவே அல்லாமல், மனிதர்களின் இயற்கைப் போக்கும் அவ்வாறில்லை. ஊரின் நன்மையைக் கருதிப் பாடுபடுகிறோம். ஊரைச் சேர்ந்தவர்களின் நன்மைக்காக மக்கள் தங்கள் சுக போகங்களைக் குறைத்துக் கொள்வதைப் பார்க்கிறோம். ஊர் எக்கேடு கெட்டால் என்ன என்று இருப்பதில்லை. அவ்வாறே நாட்டுக்கும் தேசத்திற்கும் சுகமுண்டாக்கக் கருதி மக்கள் கஷ்டப்படுவதையும் பார்க்கிறோம். சாலையிலுள்ள மரங்களின் நிழலை அனுபவிக்கப் போகும்

ஜனங்கள் யாரோ நாம் காண்பதில்லை. ஆனாலும் வருங்காலத்து மக்களுக்கு நிழல் கொடுக்க இப்போது செடிகளை நட்டு வளர்க்கிறோம். இந்த விசால புத்தியை இன்னும் ஒரு படி பெருக்கி, உலகத்தின் நன்மையையும் வருங்கால சுகத்தையும் உத்தேசித்து, நம்முடைய முன்னோர்கள் கண்ட உண்மையை உணர்ந்து, பாவங்கள் உலகத்தில் வளராதபடி அனைவரும் வேத வாழ்க்கை நடத்தித் தங்கள் ஆத்மாக்களை இந்த ஜென்மத்தில் உயர்த்திக் கொள்ள வேண்டும். வருங்கால உலகத்தின் சுகம் இந்த ஜென்மத்தில் நம் கையில் இருக்கிறது. இந்தப் பெரிய பொறுப்பை உணர்ந்து நடப்பதே ஞானம். ஒப்புரவு ஊரைக் காக்கும். அரசும் தேச பக்தியும் நாட்டைக் காக்கும். வேதாந்தம் உலகத்தைக் காக்கும்.

18

ஒரு சமூகம் சுக வாழ்க்கை அடைய வேண்டுமானல் சமூக நன்மைக்கு அனுகூலமான முறையில் பொருள்-வினியோகத் திட்டம் இருக்க வேண்டும்; அதன்படி மக்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த ஒப்புக்கொள்ள வேண்டும். சமயக் கொள்கைகள் அந்தத் திட்டத்தைத் தாங்கியும் உதவியும் வர வேண்டும். மதமும் ஆசாரமும் அரசியலும் பொருளாதாரத் திட்டமும் பரஸ்பர விரோதமின்றி ஒன்றுக்கொன்று வலிமை தருவதாக இருக்க வேண்டும். இதுவே பொதுநலத்துக்கு நேரான வழியாகும்.

வேதாந்தக் கொள்கை மேலே விரிவாகச் சொல்லப்பட்டது. வேதாந்தக் கொள்கையினின்று தோன்றிய வாழ்க்கைக் கிரமம், பகவத் கீதையிலும் திருக்குறளிலும் இன்னும் பல நூல்களிலும் சொல்லப்படுகிறது. சமுதாயத்துக்கு உதவும்படியாக எல்லா வேலைகளையும் செய்; சுயநலத்தைக் கருதாமல் பொது நலத்துக்காக எதையும் செய்து முடிப்பாயாக; எல்லாத் தொழில்களும் சம மேம்பாடு கொண்டவையாகும்; ஈனத் தொழில் என்றும் மேலான தொழில் என்றும் பேதம் கிடையாது; சமுதாய நலனுக்குச் செய்யப்படும் எல்லா வேலைகளும் ஈசன் வழிபாடு என்று கருதி உனக்கு ஏற்பட்ட வேலையைச் சரியாகச் செய்து முடிப்பாயாக; சமூகத்தில் உனக்கு என்று ஏற்பட்ட காரியத்தை சிரத்தையோடு செய்து தீர்ப்பதே கடவுள் வழிபாடு. தோல்வி, தடை, லாபம், நஷ்டம் இவற்றைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்; உன் கடன் சமுதாயப் பணி செய்வதே. இதுவே ஹிந்து தரும வாழ்க்கை முறை.

> யத: ப்ருவிருத்திர் பூதானும் யேன ஸர்வமிதம் ததம்
> ஸ்வகர்மணு தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:
>
> (பகவத் கீதை)

சமுதாயப் பொது உடைமையை வாழ்க்கை முறையாகக் கொண்ட ஒரு அரசாட்சிக்கு சமய பக்கபலம் ஒன்று வேண்டுமானல் இதைவிட மேலானது இல்லை.

முற்காலத்தில் அரசியல் திட்டமின்றி, தனி மக்கள் தம்முடைய வாழ்க்கையை மேற் சொன்ன வேதாந்த முறையில் நடத்த முடிந்திருக்கலாம். இக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் அரசியல் திட்டம் அவசியமாகும். அனைவரும் தத்தம் சக்தி யின் அளவு உழைத்து, அனைவரும் தத்தம் அவசியத்திற்குத் தக்கபடி சவுகரியங்கள் பெற்று சமுதாய வாழ்க்கையில் சமசுகம் பெறுவதற்குத் தகுந்த ஒரு பொருள்-வினியோகத் திட்டமும், தொழிற் திட்டமும் அரசியற் காப்புடன் அமைந்து நிறைவேற்றப்பட வேண்டும். இதுவே பொது வுடைமை அல்லது சமுதாயிகம் என்றும், ஆங்கிலத் தில் ஸோஷலிஸம் என்றும் சொல்லப்படும் திட்டம். சமுதாயப் பொது வினியோக முறையை ஒப்புக் கொண்டு நிறைவேற்றும் நாட்டுக்கு வேதாந்தத்தில் போதிக்கப்படும் உண்மையும் கீதையில் உபதேசிக் கப்படும் வாழ்க்கை முறையுமே மிகப் பொருத்தமான சமயக் கொள்கையும் ஆசாரமுமாகும்.

அனைவரும் தத்தம் திறமைக்கும் சக்திக்கும் தக்கபடி வஞ்சனையின்றி, பொது நன்மைக்காக உழைத்து அனைவரும் தத்தம் அவசியத்துக்குத் தக்கபடி சமுதாயத்தினின்று பொருளும் சவுகரியங் களும் பெறவேண்டும். தனி யொரு மனிதனுக்கு போதிய உணவு இல்லை அல்லது உடை இல்லை யென்பது, பௌதிக ஆராய்ச்சிகளின் பயனைப் பெற்ற மானிட சாதிக்கு மானக்கேடு. அனைவரும் உணவும் உடையும் பெறுவதுடன் அனைவரும்

சமுதாய சந்தோஷத்தில் சரியான பங்கும் பெற வேண்டும். இதற்கு மூலாதாரம் அனைவரும் நன்றாக உழைக்க வேண்டும். புறக்காவலின் நிர்ப்பந்தமின்றி வஞ்சனையும் மோசமுமில்லாமல் சமுதாய வேலைகள் நடைபெற வேண்டும். இதற்குத் தக்க பண்பாடும் சமயமும் பொதுமக்களுக்கு வேண்டும். பாரதநாட்டில் தோன்றி நிற்கும் வேதாந்தம் இதற்கு மிகவும் பொருத்தமான மதமாகும்.

எல்லாவித உழைப்பும் சமுதாயத்துக்கு வேண்டும். ஆனபடியால் எல்லாவித உழைப்பும் மதிப்புப் பெற்று நிற்கவேண்டும். சிலர் உழைப்பதும் சிலர் உழைப்பின்றிச் சுகமாக இருப்பதும் அக்கிரமம். உழைப்பு என்பது பலவிதமாகும். உடலுழைப்பு, மூளைவேலை, மேல்பார்வை, ஆடல்பாடல் எல்லாமே சமுதாயச் சேவை. கடினமான வேலைகளுக்கும் நீண்ட பயிற்சி பெற்றுச் செய்யக்கூடிய உழைப்புக்கும் மதிப்பு அதிகமாக இருக்கவேண்டும். தற்காலத்தில் நடைமுறையிலிருக்கும் மதிப்புக் கிரமம் முற்றிலும் தவறு. அருவருப்பானதும் சமுதாயத்துக்கு இன்றியமையாததுமான வேலையைச் செய்து பிழைப்போர் இகழப்படுகிறார்கள். சுகமும் சந்தோஷமும் கலந்து நிற்கும் வேலைகளுக்கு மதிப்பு அதிகம். இந்தத் தலைகீழ் முறை ஒழியவேண்டும். போட்டியும் வேட்டையும் மூலதனமும் சுயநலமும் ஆதாரமாகக் கொண்ட தற்கால வாழ்க்கைமுறையை ஒழித்து திட்டமான சமுதாயிகம் நாட்டப்படவேண்டும். வேதாந்தத்துக்குப் பொருந்திய

அரசியல், பொது உடைமை என்று சொல்லப்பட்ட சமுதாயிக திட்டமேயாகும். சமுதாயப் பொது வுடைமையைக் கோரும் அரசியலுக்கு வேதாந்தமே ஏற்ற சமயமாகும்.

பொருந்திய சமயமும், பண்பாடும் துணையில்லாத பொதுவுடைமைத் திட்டம் ஏமாற்றத்திலும் திருட்டி லும் முடியும். அரசியலும் சமயக் கொள்கையும் பரஸ்பரம் தாங்கி நின்றால் சமுதாயிகத் திட்டம் மோசமின்றிநிறைவேறும். சமயக்கொள்கையானது மக்களின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஒரு சாசன மாகும். காவற்காரன் வேண்டாத காவல் ஆகும். சமயமும் அதனல் உண்டாகும் பண்பாடும் இல்லாமல் அரசியல் ஒன்றையே ஆதரவாகப் பெற்ற பொதுவுடைமைத் திட்டம் பலாத்காரமும் துன்பமுமாக முடிந்து அழிந்து போகும். போட்டி யற்ற வாழ்க்கையும் சமுதாயிகப் பொதுவுடைமைத் திட்டமும் சரிவர நடைபெறுவதற்கு வேதாந்தத் தில் பண்பட்ட மக்களின் பற்றற்ற முயற்சி மிகவும் சிறந்த சாதனமாக இருக்கும்.

19

ஆகவே வேதாந்தமும், சமுதாயப் பொதுவுடை மையும், பௌதிக ஆராய்ச்சி உண்மையும் தற்கால உலக வாழ்க்கைக்கு வேண்டிய மூன்று பெரும் விஷயங்கள். இந்தப் புதுப் பிரஸ்தானத்ரயத்தை பாரதமக்கள் தம் வாழ்க்கையில் ஒப்புக்கொண்டு புது வலிமை யடைந்தால் ஆசியாவிலே இந்தியா

சந்தேகமில்லாமல் முதல் ஸ்தானம் அடையும், உலகத்துக்கும் வழிகாட்டும்.

கிறிஸ்துவ தர்மத்துக்கும், அந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாகக் கணக்கிடப்படும் மேல்நாட்டிலுள்ள ஜனசமுதாயங்களின் ராஜநீதிக்கும் ஒன்றுக்கொன்று முற்றிலும் விரோதம் என்பது யாவரும் அறிந்த விஷயம். முற்றிலும் முரண்பாடு என்பதை மறைக்காமல் ஒப்புக்கொண்டு, தருமம், சமயம், மார்க்கம் இவை தனி விஷயம், லௌகிகம் என்பதே வேறு, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, கடவுள் வழிபாடு என்பது ஒரு தனிச் சடங்கு, என்றிவ்வாறு பிரித்து வைத்துக்கொண்டு வாழ்க்கையும் ராஜாங்க காரியங்களும் மேல் நாட்டில் நடைபெற்று வருகின்றன. இதை நாம் பின்பற்றலாகாது.

பூரண சுயராஜ்யம் என்பது உலகக் கடமையைச் செலுத்துவதற்காக நாம் அடைய வேண்டிய ஒரு நிலை. மற்றவர்களைப்போல் நாமும் பொய் வாழ்க்கை நடத்துவதற்கல்ல. "தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்பது தனி மனிதனுக்கு மட்டும் சொன்னதல்ல. ஒரு மக்கட் சமூகத்திற்கும் அதுவே உண்மையான அறம். புகழற்ற சுயராஜ்யத்தில் பயனொன்றுமில்லை. வீண்கவலையும் சச்சரவும் விலைக்கு வாங்கிக் கொண்டபடியாகும். அனைத்தும் ஒரு மெய்ப்பொருளின் பரிணாமம் என்னும் உண்மையை உணர்ந்து மக்கள் அனைவரும்

தேசத்தில் நடைபெறக்கூடிய ஆக்கத் தொழிலில் ஈடுபட்டு ஊக்கத்துடன் உழைத்துப் பொது நலனை வளர்த்து, ஆக்கிய பொருள்களையும் உண்டான சுக சந்தோஷங்களையும் அனைவரும் சமமாக அனுபவித்துக் கொண்டு சுதந்திரமாக நடத்தும் ஆட்சியே உலகத்தில் புகழ் பெறக்கூடிய அரசியல். அதுவே பாரத நாட்டின் கோரிக்கையும் குறிக்கோளும்.
